# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,198 — 1960 සැප්තැම්බර් 13 වැනි අඟහරුවාද — 13.9.1960**

**12,198 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ந் திகதி செவ்வாய்க்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**எல். பி. 50/34**

**தொற்று நோய்கள் (விலங்கினங்கள்) சட்டம்**

1947 ம் ஆண்டு செப்டெம்பர் 24 ம் தேதிய 9,773 ம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்திப்பிரக்டனப்படுத்தப்பட்டதும் 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்கச் சட்டப்படி திருத்தப்பட்டதுமான தொற்று நோய்கள் (விலங்கினங்கள்) சட்டம் (அத். 327) உட்பிரிவு 9 (1) (18ஏ) யினுல் அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு கமத்தொழில் காணி நீர்ப்பாசன மின்சார பகுதி அமைச்சரால் இப்பிரமாணம் ஆக்கப்பட்டதாகும்.

ஸீ. பி. டி சில்வா,
கமத்தொழில் காணி நீர்ப்பாசன மின்சார பகுதிகளின் அமைச்சர்.

கொழும்பு,
1960 ம் ஸூ செப்டெம்பர் மீ 10 ந் உ.

**பிரமாணம்**

பிரதான அரசாங்க மிருகவைத்தியரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பெற்ற உத்தரவுச் சீட்டின்றி கீழ்க்காணும் பட்டோலேயில் குறிக்கப்பட்ட நாட்டுத் துறைமுகங்களிலிருந்து ஒருவரும் இலங்கைக்குள் குதிரைகளேயும், கோவேறு கழுதைகளேயும், கழுதைகளேயும் இறக்குமதி செய்யக்கூடாது.

பிரதான அரசாங்க வைத்தியர் அல்லது அவரால் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட உத்தியோகத்தர், இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுங் குதிரை, கோவேறு கழுதை, கழுதை, "ஆபிரிக்கக் குதிரை நோய்" என்னும் வியாதியற்றதெனத் திருப்தியுறின் அன்றி, இப்பிரமாணத்தின் பந்தி (1) இன்படி உத்தரவுச் சீட்டு வழங்கப்பட மாட்டாது.

**பட்டோலே**

**நாடுகள்**

| | |
|---|---|
| துருக்கி | ஆபிரிக்கா |
| சிரியா | அபுகானிஸ்தான் |
| ஜோர்தான் | பாகிஸ்த்தான் |
| எகிப்து | இந்தியா |
| சோடி அரேபியா | யோர்ஜியா |
| ஈராக் | அசேபயிஜான் |
| யேமன் | ஆமினியா |
| வடின் பாதுகாப்பு நாடுகள் | யு.எஸ்.எஸ். ஆர். |
| ஓமன் | துருக்கிக் குடியரசு |

**1955 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தாலும், 1957 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தி அமைக்கப்பட்ட 1947 ம் ஆண்டின் 30 ம் இலக்க உணவு வழங்கல் சட்டம்**

**4 (2) ம் பிரிவின் கீழுள்ள கட்டளே**

1947 ம் ஆண்டின் 30 ம் இலக்க உணவு வழங்கல் சட்டத்தின் 4 (2) ம் பிரிவின் பிரகாரம் டிக்கிரி பண்டார இலங்காரத்தின, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளேயால் 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ந் திகதி வெளியான 12,083 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பாதுகாப்பு, வெளிவிவகார அலுவல்கள் அமைச்சரால் 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ந் திகதியில் திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின் அட்டவணேயை " பருப்பு (உடைக்கப்பட்டதும் உடைக்கப்படாததும்), மசூர்ப் பருப்பு " என்பவற்றைச் சேர்த்து பின்வருமாறு வாசிக்கப்படத் திருத்தியமைக்கிறேன்.

**அட்டவணே**

அரிசி,

நெல்,

கோதுமை,

கோதுமை மாவு,

சீனி,

ஈர வெண்காயம்,

இந்திய மக்கள் குடியரசிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் பனங்கற்கண்டைத் தவிர்ந்த கற்கண்டு,

இந்திய மக்கள் குடியரசிலிருந்தும் பாக்கிஸ்த்தானிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் கருப்பட்டியைத் தவிர்ந்த கருப்பட்டி,

பருப்பு (உடைக்கப்பட்டதும், உடைக்கப்படாததும்) மசூர்ப் பருப்பு.

டி. பி. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்
போக்குவரத்து அமைச்சு,
(உணவுப் பகுதி)
330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.
1960 ம் ஸூ செப்டெம்பர் மீ 9 ந் உ.




இலங்கை அரசாங்க அச்சகத்திற பதிப்பிக்கப்பெற்றது